Registered as a Newspaper

மக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

நல்லூர் இளை நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 20 | ( 05-12-93 ) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 290

## இனங்காணப்படாத ஆணின் சடலம் அடையாளம் காண உதவக் கோரிக்கை

ஆவரங்கால் 10ஆம் கட்டைப் பகுதியிலிருந்து இனமதெரியாத ஆணின் சடலம் ஒன்று தமிழீழ காவல்துறையினரால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 50 வயது மதிக்கத்தக்க இவ்ஆணின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. 03ER8625 என்ற இலக்கமுடைய துவிச்சக்கர வண்டிக்கு அண்மையில் சடலமாக காணப்பட்ட இந்த வயோதிபர் வெள்ளை நிறமுடைய எட்டுமுழவேட்டியும் சாம்பல் நிறத்தில் வெள்ளைக் கோடுகள்உடைய சேட்டும் அணிந்திருந்தார். பொதுநிறமும் பருமனான தோற்றமும் உடைய இவரது உயரம் 5அடி 6அங்குலம் இவரது சேடபொக்கட்டுக்குள் ஒருகடித உறையும் ஒருதொகைப் பணமும் இருக்கக்காணப்பட்டது கடித உறையில் மானிப்பாய் இலங்கைவங்கியின் றப்பர் முத்திரை பதிக்கப்பட்டிருக்கிறது அத்துடன்618564150Vஎன்ற இலக் (3ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ தளபதி சிசில் இராஜினாமா?

# பூநகரியில் ஏற்பட்ட தோல்வியின் எதிரொலி!

(கொழும்பு)



சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது. பூநகரியில் ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து அரசாங்கத்துடனும், இராணுவத் தரப்பின் ஒரு பகுதியினருடனும் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்தே இவ் இராஜினாமா இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இராணுவத் தளபதியின் இராஜினாமாவை உறுதிப்படுத்த முடியவில்லை என தெரிவித்த பி.பி.ஸி. சிசில் வைத்தியரெட்னா பதவி விலகுவாரா என்பது அல்ல தற்பொழுது கேள்வி எப்பொழுது விலகுவார் என்பதே கேள்வியாக உள்ளது என்றும் குறிப்பிட்டது.

அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் சிறிலங்கா இராணுவம் பலத்த பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமை தெரிந்ததே. இதைத் தொடர்ந்து இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவின் திறமை பற்றியும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருந்தன

இதேவேளை, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியது.

இறுதியாக பூநகரிப்படைத் தளத்தில் ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து இராணுவத் தளபதிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பெரும் கருத்துமோதல்கள் தோன்றின..

இதில் வடபகுதிக்கென புதிய இராணுவக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியமையும், அதற்கு இணைப்பாளராக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவை நியமித்தமையும் முரண்பாட்டை மேலும் தீவிரமாக்கியது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடே சிசில் வைத்தியரெட்னாவை இராஜினாமாச் செய்யும் அளவிற்குச் சிந்திக்கச் செய்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை இராணுவத் தளபதி பதவிவிலகிவிட்டார் என்பதை வெரித்தாஸ் வானொலி தவிர வேறு எந்த செய்திகளும் ஊர்ஜிதம் செய்யவில்லை. ஆனால் இராணுவத் தளபதியின் இராஜினாமா குறித்து செய்தி வெளியிட்ட பி.பி.ஸி இராணுவத் தளபதி பதவி விலகுவது என்பது ஊர்ஜிதப்படுத்தக்கூடியது ஆயினும் எப்பொழுது விலகுவார் என்பதே கேள்வியாகும் எனத் தெரிவித்தது.

## 'பயங்கரவாதத்தில்' ஈடுபடுவோர் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்

### பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கில் 'பயங்கரவாத' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் கலந்தாலோசனை கருத்தொருமைப்பாடு ஆகியவை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வருமாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மொரட்டுவவில் பிரின்ஸ் ஒப் வேல்ஸ் பாடசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதமர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆயுதங்கள் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்க எதிர்க்கட்சி தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இரு மாகாணங்களின் இணைப்பு தொடர்பாகவே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

வடக்கு கிழக்கின் உண்மை நிலைபற்றி அரசு பிரசார இயக்கம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. பத்திரிகைச் சுதந்திரம் என்றபோர்வையில் அரசுக்கு முட்டுக்கட்டை போடுவது அநீதியான செயல் என்றும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார்.

## போர்த்தளபாட கொள்வனவில் செல்வாக்குள்ள சிலர் கமிசன்

### சு. க. எம். பி. குணரட்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

வான்படை உதவியின்றியே எமது படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பி சி. வி. குண

ஐநூற்றி நாற்பது மில்லியன ரூபாவிற்கு வாங்கப்பட்டநான்கு புக்காரா போர் விமானங்களில் மூன்று பாவிக்க முடியாத நிலையில் தரையில் விடப்பட்டுள்ளன.

களைப் பெற்று தரக்குறைவான போர்க் கருவிகளை எமக்குப் பெற்றுத்தந்த விவகாரம் பற்றி கௌரவ அமைச்சர் அறிவாரா?என்று அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா

## சிறிலுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தளபதிக்கு வெளிநாட்டில் தூது

## பிரபாவின் பிறந்தநாள் கொழும்பில் விடுமுறை

(கொழும்பு)

கடந்த 26ஆம் திகதி பிரபா

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் நெவிட்டிக்கல சுரேந்

கருத்தொருமைப்பாடு ஆகியவை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வருமாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மொரட்டுவவில் பிரின்ஸ் ஒப் வேல்ஸ் பாடசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதமர் உரையாற்றுகையிலேயே இவ்வித்தாவது, வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆயுதங்கள் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்க எதிர்க்கட்சி தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இரு மாகாவேறுபாடு நிலவுகிறது.

வடக்கு கிழக்கின் உண்மை நிலைபற்றி அரசு பிரசார இயக்கம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. பத்திரிகைச் சுதந்திரம் என்றபோர்வையில் அரசுக்கு முட்டுக்கட்டை போடுவது அநீதியான செயல் என்றும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார்.

# போர்த்தளபாட கொள்வனவில் செல்வாக்குள்ள சிலர் கமிசன்

## சு. க. எம். பி. குணரட்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

வான்படை உதவியின்றியே எமது படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பி சி. வி. குணரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐநூற்றி நாற்பது மில்லியன ரூபாவிற்கு வாங்கப்பட்டநான்கு புக்காரா போர் விமானங்களில் மூன்று பாவிக்க முடியாத நிலையில் தரையில் விடப்பட்டுள்ளன.

போர்த் தளபாடங்களையும், ஆயுதங்களையும் கொள்வனவு செய்யும்போது செல்வாக்குடைய சிலர் கமிசன்களைப் பெற்று தரக்குறைவான போர்க் கருவிகளை எமக்குப் பெற்றுத்தந்த விவகாரம் பற்றி கௌரவ அமைச்சர் அறிவாரா? என்று அமைச்சர் விமல் விக்கிரமசிங்காவைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், 26-11-92 அன்று சபை நிகழ்வுகளில், அதற்குப் பின்பும் இந்த ரக போர்விமானங்கள் உகந்தவை அல்ல என்றும் சபையில் தெரிவித்திருந்தேன். இந்த மூன்று விமானங்களும் தொழில நுட்பக் கோளாறுகள் காரணமாக தரையில் விடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பூநகரி தாக்குதலில் மிகவும் அத்தியாவசியமாக இருந்த விமானப்படையின்உதவி இல்லாததாலேயே எமது துருப்புக்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ரகசிய கூட்டம் நடாத்திய 18 சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)

குளியாப்பிட்டியவிலுள்ள திரையரங்குகளில் இரகசிய கூட்டங்களை நடாத்தியதாக கூறப்படும் சிங்கள இளைஞர் யுவதிகள் திரையரங்கில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இப் பகுதியிலுள்ள இரண்டு திரையரங்குகளில் 18 இளைஞர், யுவதிகள் இரகசியக் கூட்டங்கள் நடாத்துவதாக கிடைத்த தகவல்களையடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் இவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அதிர்ச்சி ஊட்டுவனவாக உள்ளன எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தளபதியின் இராஜினாமாவை உறுதிப்படுத்த முடியவில்லை என தெரிவித்த பி.பி.ஸி. சிசில் வைத்தியரெட்னா பதவி விலகுவாரா என்பது அல்ல தற்பொழுது கேள்வி எப்பொழுது விலகுவார் என்பதே கேள்வியாக உள்ளது என்றும் குறிப்பிட்டது.

அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் சிறிலங்கா இராணுவம் பலத்த பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமை தெரிந்ததே. இதைத் தொடர்ந்து இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவின் திறமை பற்றியும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருந்தன

இதேவேளை, இராணுவத் தளபதிசிசில் வைத்தியரெட்னாவின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியது.

இறுதியாக பூநகரிப்படைத் தளத்தில் ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து இராணுவத்தளபதிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பெரும் கருத்துமோதல்கள் தோன்றின.

இதில் வடபகுதிக்கென புதிய இராணுவக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியமையும், அதற்கு இணைப்பாளராக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவை நியமித்தமையும் முரண்பாட்டை மேலும் தீவிரமாக்கியது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடே சிசில் வைத்தியரெட்னாவை இராஜினாமாச் செய்யும் அளவிற்குச் சிந்திக்கச் செய்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை இராணுவத் தளபதி பதவிவிலகிவிட்டார் என்பதை வெரித்தாஸ் வானொலி தவிர வேறு எந்த செய்திகளும் ஊர்ஜிதம் செய்யவில்லை. ஆனால் இராணுவத் தளபதியின் இராஜினாமா குறித்து செய்தி வெளியிட்ட பி.பி.ஸி இராணுவத் தளபதி பதவி விலகுவது என்பது ஊர்ஜிதப்படுத்தக்கூடியது ஆயினும் எப்பொழுது விலகுவார் என்பதே கேள்வியாகும் எனத் தெரிவித்தது.



# மீட்புநிதி கடன் மீளல்

இதுவரை காலமும் தமிழீழ மீட்புநிதி கடன் மீளலுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் கடந்த மாவீரர் வாரத்தில் தமிழீழமீட்புநிதிக் கடனை மீளப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று ஞாயிற்றுக் கிழமைமு. ப. 11மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசிமகாவித்தியாலயத்தில்பெற்றுக்கொள்ளலாம் என மீட்புநிதிப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சிரிலுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தளபதிக்கு வெளிநாட்டில் தூதுவர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

மேலும் இதுபற்றிக் குறிப்பிட்ட பி. பி. ஸி சிறிலங்காவில் பதவி விலகும் ஒருவரை இவ்வாறு விட்டுவிடுவது ஒரு வழமையான பாணியே எனவும் தெரிவித்தது.

# பிரபாவின் பிறந்தநாள் கொழும்பில் விடுமுறை

(கொழும்பு)

கடந்த 26ஆம் திகதி பிரபாகரனின் பிறந்த தினத்தன்று கொழும்பில் அரைவாசிக்கு அதிகமான ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை.

இதன்மூலம் பிரபாகரனின் பிறந்தநாளை நாமே விடுமுறை தினமாக்கிக் கொண்டோம்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் நெவிட்டிக்கல சுரேந்திராதேவி விகாரையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் முன் அறிவித்தல்கொடுத்து எதனையும் செய்யமாட்டார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சிசிலின் ராஜினாமாவினால் தோல்விகளை ஈடுகட்ட முடியாது

(கொழும்பு)

''நன்றாக திட்டமிட்டு அர்ப்பணிப்புடன் தாக்குதல் நடாத்தும் கெரில்லா அணியொன்றின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க சிசில்வைத்தியரெட்னாவின் பதவி ராஜினாமாவினால் மட்டும் முடியாது இவரது இராஜினாமா மூலம் இராணுவத் தோல்விகளை ஈடுகட்ட முடியாது'' என பி. பி. ஸி. தெரிவித்தது

எனவே சிசில் வைத்தியரெட்னாவின்இராஜினாமாவினால் மட்டும் சிறிலங்கா இராணுவத்தினருக்கு நல்ல ஒரு எதிர்காலம் அமையப் போவதில்லை என மேலும் தெரிவித்தது.

தமிழ் போராளிகளுக்கெதிரான போரில் அரச படைகள் மோசமான பின்னடைவை கண்டதும் சிசிலின் தலைமைக் காலத்தில்தான் அப்

(3ஆம் பக்கம் பார்க்க)

# சூறாவளி ஏற்படுத்திய பெரு நாசம்; வீடுகள் வீழ்ந்தன, மரங்கள் முறிந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டை சூறாவளி தாக்கியுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பித்த சூறாவளித் தாக்கம் நேற்றுக் காலை வரை நீடித்தது. பலமணி நேரமாக இருந்த இச்சூறாவளித் தாக்கத்தால் குடாநாட்டில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருந்த கடும் மழையினாலும் சூறாவளித் தாக்கத்தினாலும் குடாநாட்டில் மட்டும் பலர் காயமடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடியிருப்புகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளன. பல குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. இவற்றைவிட மீன்பிடிப்படகுகள் பலவும் காற்றினால் அடித்துச்செல்லப்பட்டும் சேதமடைந்தும் உள்ளன.

மேலும் குடாநாட்டின் அனேக பகுதிகளில் நூற்றுக் கணக்கான பயன்தரு மரங்கள் காற்றின் வேகத்தினால் முறிந்தும் வேருடன் பிடுங்கி வீசப்பட்டும் உள்ளன. அத்துடன்வாழைத்தோட்டங்கள் அழிக்கப்பட்டும் நெல் வயல்கள் நீரினால் நிரம்பியும் காணப்படுகின்றன.

இச் சூறாவளித் தாக்கத்தினால் தொல்புரத்தில் உள்ள வ. சின்னத்துரை என்பவரது வீடு சரிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது இவ் வீட்டில் நித்திரையில் இருந்த சின்னத்துரையும் அவரது இரு பிள்ளைகளும் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். இவற்றைவிட வடமராட்சியில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவற்றைவிட வலிகாமத்தின் ஏனைய பகுதிகளில் பல பாரிய மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

வழக்கம்பரை அம்மன் கோயிலுக்கு அண்மையில் வீதியோரமாக நின்ற ஆலமரம் ஒன்றும், மானிப்பாய் மருத்

(3ஆம் பக்கம் பார்க்க)

# படகு கவிழ்ந்ததால் மீனவர் நடுக்கடலில் தத்தளிப்பு

## 3 மீனவர் கரைசேர்ந்தனர்

(நமது நிருபர்)

காக்கைதீவு கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்க சென்ற மீனவர் மூவர் படகு கவிழ்ந்ததினால் இரவு முழுவதும் கடலில் தத்தளித்து நேற்று காலை கரைசேர்ந்துள்ளனர். இதேவேளைமேலும் சிலரைக் காணவில்லை எனவும் தெரிய வருகிறது.

இச் சம்பவத்தில் இரவு முழுவதும் கவிழ்ந்த படகை பிடித்துக்கொண்டு இருந்தமையால் உடல் விறைத்த நிலையில் இம் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர். சின்னத்தம்பி விக்னேஸ்வரன் (30), மார்க்கண்டு கண்ணன் (25), கந்தையா

(3ஆம் பக்கம் பார்க்க)

# சூறாவளி விலகியது

(கொழும்பு)

காங்கேசன்துறைக்கு கிழக்கே மையம் கொண்டிருந்த கடும் சூறாவளி தற்போது வடமேல திசையாக தமிழ்நாடு நோக்கி நகர்ந்து செல்வதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது வடபகுதியில் தொடர்ந்து காற்றுடன் கூடிய மழை பெய்யும் எனவும் கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# கொழும்பில் இரகசிய ராணுவ உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

கொழும்பு இராணுவத் தலைமைப் பீடத்தில இரகசிய இராணுவ உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றுள்ளதெனவும் எனினும் இம் மாநாட்டில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன அல்லது இம் மாநாட்டில் யார்? யார்? பங்குபற்றினர் என்பது குறித்து தெரியவரவில்லை எனவும் பி. பி. ஸி செய்திகள் தெரிவித்தன.

இம் மாநாட்டின் பின்னரே இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னாவின் ராஜினாமா விவகாரம் குறித்து பரபரப்பாக பேசப்பட்டது எனவும் பி பி.ஸிதெரிவித்தது.

இம் மாநாட்டில் எதிர்கால இராணுவ நடவடிக்கைகள் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதாக இராணுவவட்டாரங்கள் கூறுகின்றன.

# அமைச்சரவை கூட்டம்; தொண்டா புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை சீர்செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும்அமைச்சர்கள் சிறிசேனகுரே, சொக்ஸி ஆகியோரின் முயற்சிகள் ஏனைய அமைச்சர்களின் வற்புறுத்தல்களினால் முறியடிக்கப்பட்டதையடுத்து சிக்கல் மேலும் வலுவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதனை அடுத்து அமைச்சர் தொண்டமான் அமைச்சரவை கூட்டங்களைப் புறக்கணித்து வருவதாகவும் தெரி

(3ஆம் பக்கம் பார்க்க)

## நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

## ஃ வரவேற்பு விழா மலர் ஃ

# நல்லை ஆதீனத் திருத்தொண்டு மிளிர சுவாமிகளின் அருளாட்சி ஓங்கட்டும்

'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு'

என்று பாடிவைத்தார் திருவள்ளுவர். இலௌகீகம் தெய்வீகம் என்ற இரு நெறியில் இந்த உலக மக்கள் தமக்கேற்றபடி ஈடுபாடுகொண்டு வாழ்வது கண்கூடு. மக்கட்குப் பெருமை தருவன கல்வி, செல்வம், ஒழுக்கம் என்பன. எனினும் எல்லாப் பெருமைகளையும்விட பற்றற்ற துறவிகளின் பெருமை உயர்ந்ததாகவே கருதப்படுகிறது. எல்லாச் சமயத்தவர்களும் இத்தகையோரைக் குருவாக மதித்து வழிபடுகின்றனர் ''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்ற பழமொழியும் சிந்திக்கத்தக்கது.

எமது நாட்டில் சைவச் சால்பும் துறவு வாழ்வும் கொண்டு வாழ்ந்து வழிகாட்டிய குருமணிகள் பலரை நாம் ஞாபகத்திலிருத்த வேண்டும். யோகர் சுவாமிகள் போன்ற முற்றறத்துறந்த முனிவர்கள் வாழ்ந்து வழிகாட்டிய நாடு எமது நாடு.

ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்

என்பது இவர்களின் துறவு நோக்கமாகும். இந்தப் புனித பாதையிலே தனக்கென்று ஒரு பாணியை அமைத்து நல்லுரைகளினாலும் திருத்தொண்டுகளினாலும் ஒப்பற்ற நிலையில் வாழ்ந்தவர் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியார் அவர்கள். இவர்களுடைய பேருழைப்பினாலும் தூய உள்ளத்தினாலும் அமைக்கப்பட்டதே நல்லை திருஞானசம்பந்தராதீனமாகும்.

இன்று இவ்வாதீனத்தில் அருளாட்சி நடத்துபவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியார் என்னும் நாமத்துக்குரிய சுவாமிகளாவர். நல்லைக்குருமணியின் முதன்மைச் சீடராகவும் அவர்கள் வழியில் பிறழாது முறைப்படி பக்குவமடைந்தவராகவும் விளங்குபவர் இவர்களே.

சமீபத்தில் சுவாமிகள் தலயாத்திரையின் பொருட்டு பாரத நாடு சென்று திரும்பியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. தென்னாட்டுத்தலங்கள், வட நாட்டுத் தலங்கள் ஈழ நாட்டுத்தலங்கள் யாவற்றையும் தரிசித்து மீண்டமை சைவ மக்களின் தவப்பேறாகும். சிறப்பாக இவர்களின் காசியாத்திரையும் கங்கை நீராடலும் திரிவேணிசங்கம ஸ்நானமும் சைவமக்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய புனிதப்பணியாகும்.

சுவாமிகள் அவர்கள் தமிழ்நாட்டு ஆதீனங்களையும் ஆதீன முதல்வர்களையும் தரிசித்தமை பெரியதொரு அருள் நிகழ்வாகும் தமிழ் ஈழத்தின் ஒரே ஒரு ஆதீனமாக விளங்கும் பெருமை பெற்ற இவ்வாதீனத்தை வளர்க்க வேண்டியதும் வளம் பெறச்செய்ய வேண்டியதும் சைவமக்களின் கடமையாகும். திருத்தொண்டர்களை உருவாக்கல் சைவத்துறையில் ஆழ்ந்த அறிவுடையோரை உருவாக்கல் ஆகிய இரண்டுபணி மிகவும் இன்றியமையாதது வெறுமனே சமய மகா நாடுகளோ அல்லது மற்றும் ஆரவார நிகழ்ச்சிகளோ நடாத்துவதால் பயன் ஏற்படாது இப்போதைய மகாநாடுகள் எல்லாம் அறிவை வளர்ப்பதை விடுத்து ஆரவாரத்தை வளர்க்கின்றன. சமய மகாநாடுகள் எல்லாம் உணவு மகா நாடுகளாக மாறுகின்றன. சோம்பேறிக் கூட்டம் ஒன்று இம் மகாநாட்டில் பங்கு பற்றி இடத்தை நிரப்புகிறது. ஆதீனங்கள்தான் எமது சைவத்தின் தலைமைப் பீடங்கள் எனவே எதிர்காலம் இவற்றைக் கருத்தில் வைத்து சைவப்பற்றும் தியாகசிந்தனையும் உறைப்பான திருத்தொண்டும் இணைந்த

## வரவேற்பு விழா

இடம்: இளங் கலைஞர் கலாமண்டபம்

காலம்: 05. 12. 93 ஞாயிறு பி. ப. 5 மணி

தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(ஆலோசகர் நல்லை ஆதீனபராமரிப்பு நிதியம்)

முதன்மை விருந்தினர்
சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை தங்கம்மாஅப்பாக்குட்டி

பிற்பகல் 4.00 மணிக்கு ஈழத்துப் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின் இன்னிசையுடன் சுவாமிகள், நல்லை ஆதீனத்திலிருந்து - கோயில் வீதி, சட்டநாதர் வீதி வழியாக இளங் கலைஞர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார். அவ்வமயம் வீதியெங்கும் பூரண கும்பம் வைத்துச் சுவாமிகளுடைய அருளாசிகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்பர்களை வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1) மங்கள இசை
2) மங்கள விளக்கு ஏற்றல்
3) இறை வணக்கம்
4) அமைதி வணக்கம்
5) வரவேற்புரை: கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் (இணைச் செயலாளர், நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்)
6) ஆசியுரை: பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்கள்
7) தலைமையுரை
8) முதன்மை விருந்தினர் உரை
9) ஆதீன வைப்பு நிதியம் கையளிப்பு:
கையளிப்பவர்: சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள்
10) சிறப்புரைகள்
அருட்கவி சீ விநாசித்தம்பி அவர்கள்
திரு. ஆர் வெங்கட்ராமன் அவர்கள் (முகாமையாளர், கொமேஷல் வங்கி)
திரு. சி. வேலாயுதம் அவர்கள் (யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

## நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியம்

நல்லை ஆதீனம் சைவசமயத்தவர்களுக்கு வழிகாட்டு நிலையம். நல்லை ஆதீன முதல்வர் சைவசமயத்தவர்களின் வழிகாட்டியாகக் கொள்ளப்பட வேண்டியவர். எனவே நல்லை ஆதீனவளர்ச்சிக்குநாம் எல்லோரும் ஏதோ வகையிலே பணிபுரிய வேண்டும்.

நல்லை ஆதீனத்துக்குச் செல்பவர் பலர் உளர்; அதனைப் பற்றி உசாவுபவர் பலர் உளர். ஆனால், அவ்வாதீனம் எப்படி நடைபெறுகின்றது; ஒரு நாளைய பராமரிப்புக்கு ஆதீன முதல்வர் படும் இன்னல்கள் பற்றியெல்லாம் உசாவுபவர் சிலரே. இந்நிலை மாறி, எமக்கு இருக்கும் ஒரேயொரு ஆதீனத்தின் உன்னத நிலைக்குப் பலரும் உதவும் நிலை உருவாக வேண்டும்.

பலரும் இந் நல்ல பணிக்கு உதவ வழி செய்யும் படியாக எங்கள் மதிப்புக்குரிய சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஒரு சிறிய குழு அண்மையிலே கூடி, நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியம் ஒன்றைத் தொடங்கியது.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
ஆலோசகர், நல்லை ஆதீனபராமரிப்பு நிதியம்

இந்நிதியத்தின் பொருளாளராகஇயங்கும் திரு. க. சோமசேகரம் அவர்களுடைய அயராத முயற்சியினாலே இந் நிதியத்துக்குப் பல வர்த்தகப் பெருமக்களும் ஏனையோரும் நிதி வழங்கி வருகின்றார்கள் இந் நிதியம் பெருக வேண்டும். நல்லை ஆதீனம் இன்னல் எதுவுமின்றி இயங்க வேண்டும் இக்குறிக்கோளை அடைய எல்லோருடைய உதவியினையும்நாம் வேண்டி நிற்கிறோம்.

நல்லை அதீன பராமரிப்பு நிதியம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியிலே சேமிப்புக் கணக்காகத் தொடங்கப்பட்டுள்ளது இந் நிதியினைக் கையாளும் உரிமை ஆதீன முதல்வருக்குமட்டுமேஉண்டு. இந்நிதியத்தினுடைய சேமிப்புக் கணக்கு இலக்கம் 25826 நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் இக்கணக்குக்குப் பணம் செலுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## பல்லாண்டு வாழி! வாழி!!

சைவத்தின் திருவிளக்கே தமிழில் ஊறி
சன்மார்க்க நெறிகாட்டும் ஞான தீபா!
வையகத்தில் கருணைநீதி பக்தி யாவும்!
வாழவைக்கும் சன்யாஸ மூர்த்தி நீயே!
செய்யதிரு ஞானசம் பந்த ஸ்வாமி
செழுநாம ஆதீன முதல்வ ரான
துய்யகுரு சோமசுந் தரப ரமாச்
சாரீயஸ்வாமிகள்நீடு வாழி! வாழி!!

நல்லைநகர் தம்பிரான் ஸ்வா மிகளின்
நளினமலர்ப்பதம் சிரமேல் சூடி நின்றே
வல்லதமிழ் வளர்சைவப் பக்தி நெறி
வாழ்வாங்கு வாழஉப யாஸம் செய்தே
சொல்லழகு பொருளழகு சோபிதம் செய்
சொன்மாரி பொழிந்தன்புக் கருணை பூக்க
நல்லசோம சுந்தரப ரமாச் சார்ய
நற்குருவும் பல்லாண்டு வாழி! வாழி!!

ஈழநாட்டுச் சைவத்தமிழ் மக்கள் சார்பில்
''கவிமாமணி''
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்.



நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
பரமாச்சார்ய சுவாமிகள்

கோயில் வீதி, சட்டநாதர் வீதி வழியாக இளங் கலைஞர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார். அவ்வமயம் வீதியெங்கும் பூரண கும்பம் வைத்துச் சுவாமிகளுடைய அருளாசிகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்பர்களை வேண்டுகின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

1) மங்கள இசை 2) மங்கள விளக்கு ஏற்றல்
3) இறை வணக்கம் 4) அமைதி வணக்கம்
5) வரவேற்புரை: கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் (இணைச் செயலாளர், நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்)
6) ஆசியுரை: பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்கள்
7) தலைமையுரை
8) முதன்மை விருந்தினர் உரை
9) ஆதீன வைப்பு நிதியம் கையளிப்பு:
கையளிப்பவர்: சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள்
10) சிறப்புரைகள்
அருட்கவி சீ விநாசித்தம்பி அவர்கள்
திரு. ஆர் வெங்கட்ராமன் அவர்கள் (முகாமையாளர், கொமேஷல் வங்கி)
திரு. சி. வேலாயுதம் அவர்கள் (யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)
திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகம்)
11) கலை நிகழ்ச்சி

**வில்லிசை**
கலாவினோதன் கணபதிப்பிள்ளை குழுவினர்

நாட்டுத்தலங்கள் யாவற்றையும் தரிசித்து மீண்டமை சைவ மக்களின் தவப்பேறாகும். சிறப்பாக இவர்களின் காசியாத்திரையும் கங்கை நீராடலும் திரிவேணிசங்கம ஸ்நானமும் சைவமக்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய புனிதப்பணியாகும்.

சுவாமிகள் அவர்கள் தமிழ்நாட்டு ஆதீனங்களையும் ஆதீன முதல்வர்களையும் தரிசித்தமை பெரியதொரு அருள் நிகழ்வாகும் தமிழ் ஈழத்தின் ஒரே ஒரு ஆதீனமாக விளங்கும் பெருமை பெற்ற இவ்வாதீனத்தை வளர்க்க வேண்டியதும் வளம் பெறச்செய்ய வேண்டியதும் சைவமக்களின் கடமையாகும். திருத்தொண்டர்களை உருவாக்கல் சைவத்துறையில் ஆழ்ந்த அறிவுடையோரை உருவாக்கல் ஆகிய இரண்டுபணி மிகவும் இன்றியமையாதது வெறுமனே சமய மகா நாடுகளோ அல்லது மற்றும் ஆரவார நிகழ்ச்சிகளோ நடாத்துவதால் பயன் ஏற்படாது இப்போதைய மகாநாடுகள் எல்லாம் அறிவை வளர்ப்பதை விடுத்து ஆரவாரத்தை வளர்க்கின்றன. சமய மகாநாடுகள் எல்லாம் உணவு மகா நாடுகளாக மாறுகின்றன. சோம்பேறிக் கூட்டம் ஒன்று இம் மகாநாட்டில் பங்கு பற்றி இடத்தை நிரப்புகிறது. ஆதீனங்கள்தான் எமது சைவத்தின் தலைமைப் பீடங்கள் எனவே எதிர்காலம் இவற்றைக் கருத்தில் வைத்து சைவப்பற்றும் தியாகசிந்தனையும் உறைப்பான திருத்தொண்டும் இணைந்து நல்லை ஆதீனம் மிளிரவும் இன்றைய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் இவற்றின் காவலராகப் பல்லாண்டு காலம் அருளாட்சி நடாத்தவும் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

- தங்கம்மா அப்பாக்குட்டி

(சி-8053)

சைவத்தின் திருவிளக்கே தமிழில் ஊறி
சன்மார்க்க நெறிகாட்டும் ஞான தீபா !
வையகத்தில் கருணைநீதி பக்தி யாவும் !
வாழவைக்கும் சன்யாஸ மூர்த்தி நீயே !
செய்யதிரு ஞானசம் பந்த ஸ்வாமி
செழுநாம ஆதீன முதல்வ ரான
துய்யகுரு சோமசுந் தரப ரமாச்
சாரீயஸ்வாமிகள்நீடு வாழி ! வாழி !!

நல்லைநகர் தம்பிரான் ஸ்வா மிகளின்
நளினமலர்ப்பதம் சிரமேல் சூடி நின்றே
வல்லதமிழ் வளர்சைவப் பக்தி நெறி
வாழ்வாங்கு வாழஉப யாஸம் செய்தே
சொல்லழகு பொருளழகு சோபிதம் செய்
சொன்மாரி பொழிந்தன்புக் கருணை பூக்க
நல்லசோம சுந்தரப ரமாச் சார்ய
நற்குருவும் பல்லாண்டு வாழி ! வாழி !!

ஈழநாட்டுச் சைவத்தமிழ் மக்கள் சார்பில்
**''கவிமாமணி''**
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்.



நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
பரமாச்சார்ய சுவாமிகள்

வாழ்த்துகிறோம் :-
# அஜந்தாஸ் பிடவை மாளிகை
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும் ஜாம். புறோடினேக்ஸ், பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவுசெய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
சி|8050


### காணவில்லை

3-12-93 அன்று நல்லூர் கோவிலுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யப்பான் ஏசியா (இல. 004AB 3491 ஆண்களுடையது) கியர் சைக்கிள காணாமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி 8062)

### அறிவியல் கருத்தரங்கு

யாழ். நாயன்மார் கட்டு சனசமூக நிலையத்தில் மாதாந்தம் நடாத்தப்படும் அறிவியல் கருத்தரங்குத் தொடர் -17, இன்றுஞாயிற்றுக்கிழமை மாலை 6. 30 மணிக்கு நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் திரு. சொக்கன் கருத்துரை வழங்குவார். தொடர்ந்து ஒளி வீச்சும் காண்பிக்கப்படும்.

## உனது பிறந்தநாளில் உன்னை நினைவு கூருகின்றோம்
## 5-12-1993



அன்னை மடியில்:
5-12-1976

அன்னை தமிழுக்காய்:
12–11–1993

### வீரவேங்கை மகிந்தன்
### (தம்பித்துரை அன்பழகன் | கமல்)

கடந்த 12-11-93 அன்று பூநகரி இராணுவமுகாம் தகர்ப்பில் (ஒபரேசன் தவளை) தன்னை ஆகுதியாக்கிக் கொண்டார்.

''இம் மண்ணில் நீ வந்து உதித்த
இந் நாளில் உன்னை எண்ணுகின்றோம்.
இத் தேச விடிவுக்காய் உருகிய எம் உயிரே !
எப் பிறப்பில் மீண்டும் சந்திப்பு என்றே
ஏங்குகின்றோம்'';

உன்பிரிவால் வாடும்,
அன்பு அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனன், மைத்துனிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

16, எழிலூர்,
கொழும்புத்துறை.

(6771)

## மக்கள் வங்கி

எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர்
தெரிவுக்கான போட்டிப்பரீட்சை

1 மாத கால
துரித பயிற்சி வகுப்புகள்

திங்கள், புதன், வெள்ளி, தினங்களில்
3.00 — 5.30

**ஆரம்பம்:-- 06-12-93 3.00 மணி**

முழுக்கட்டணம் -- 200/-

SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
16, 3RD CROSS STREET
JAFFNA. (சி-8057)

## மக்கள் வங்கிக்கு

| எழுதுவினைஞர் | சுருக்கெழுத்தாளர் |

பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான
**பயிற்சிநெறி**

ஆரம்பம்:- 6-12-93
(காலை 9 மணி)

ஆசிரியர் - அ. குமாரவேல்

விபரங்களுக்கு:
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம்சந்தி -- யாழ். (சி-8058)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-12-05

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-காத்தான்குடிப் பகுதியில் ஊர்காவல் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். அருணன்** (சுந்தரம்பிள்ளை விஜயரத்தினம் வெல்லாவெளி - மட்டு)

1988ஆம் ஆண்டு வவுனிக்குளம், 2ஆம் படிவம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**காண்டீபன்** (கேதாரநாதன் இராமநாதன்-ஒதியமலை, நெடுங்கேணி)

நெல்லியடி தேவரையாளிப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு பொலிகண்டி முகாமில் வைத்து கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**ஜெயக்குமார்-கந்தன்** (சின்னத்தம்பி ஜெயக்குமார்-அல்வாய் மேற்கு-கரவெட்டி யாழ்)

வவுனிக்குளம், 2ஆம் படிவம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தகணவன், மனைவி, குழந்தை உட்பட 16 தமிழர்கள்.

கந்தர்மடம் அம்மன்வீதியில் கொள்ளையிட வந்த தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட உடுப்பிட்டியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்வீரச்சாவெய்திய,

**புவன்** (சத்தியநாதன் சிவகுமார்-ஏழாலை மத்தி-யாழ்)

1992ஆம் ஆண்டு வவுனியா-பாவற்குளம், 1ஆம் யூனிட்டில் எதிர்பாராவிதமாக சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அழகுராஜா-தீபன்ராஜ்** (சந்தனம் செல்வன் - புளியங்குளம் - வவுனியா)

**குமார்** (சிவநாதன் விநாயகம் - முள்ளிக்குளம் வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
(சி-8059)

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

சிந்தனைக்கு

இடுப்பொடிந்த கோழிக்கு உரக்குழிலே கைலாசம்.

--தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05

## 'நம்ப நடத்தலும் நம்பி நடப்பதும்'

சிறிலங்கா அரசின் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் மீண்டும் ஒரு தடவை தனது அரச விசுவாசத்தை வெளிக்காட்டியுள்ளார். பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், ஓர் அரசு தரப்பு உறுப்பினர்போல் அல்லாது எதிர்க்கட்சி உறுப்பினர்போல் அரசாங்கத்திற்குப் போதனையும், எச்சரிக்கையும் செய்துள்ளார்.

'நம்ப நட நம்பி நடவாதே' என அரசிற்குப் போதனை செய்த இராஜாங்க அமைச்சர் கொழும்பில் உள்ள தமிழ்க்குழுக்களின் நடவடிக்கைகள்பற்றிக் கேள்வி எழுப்பியதோடு, அவர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படவேண்டியவை எனவும், அவர்களின் நம்பிக்கைத் தன்மை கேள்விக்குரியவை எனவும் குறிப்பிட்டார். ''ஜனநாயக நீரோட்டத்திற்கு மற்றைய தமிழ்க்குழுக்கள் வந்துவிட்டார்கள் என்று கூறுகின்றபோதும்கூட, இங்கே மறைமுக வேடம்போட்டுள்ள வேடதாரிகளை அரசாங்கம் இனம்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்பதே அவரது கோரிக்கை ஆகும்.

அமைச்சர் இராஜமனோகரியின் இக்குற்றச்சாட்டில் எத்தகைய உண்மையுள்ளது, பொய்யுள்ளது என்பது இங்கு முக்கியமில்லாத ஒன்று. ஏனெனில், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களின் நடவடிக்கைகளை முழுமையாக சிறிலங்கா அரசாங்கமும், ஆயுதப்படையும் அதன் புலனாய்வுத்துறையும் அவதானித்துவருவதோடு, கட்டுப்படுத்தியும் வழிநடத்தியும் வருகின்றன.

மேலும், அக்குழுக்களுக்கான ஆயுத விநியோகம் உட்பட உணவு, பணம் என்பவையும் அரசாங்கத்தினாலேயே வழங்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில், இராஜாங்க அமைச்சரின் குற்றச்சாட்டு என்பது எத்தனை பொருத்தப்பாடு என்பது கேள்வியே. இந்நிலையில் அவரது குற்றச்சாட்டு என்பது அரசிற்கான விசுவாசத்தைக் காட்டும் முயற்சியே தவிர வேறெதுவுமில்லை.

ஆனால், இதில் எவரும் பெரிதாகக் கவலைப்படுவதற்கோ அன்றி குறைபட்டுக்கொள்வதற்கோ அன்றி ஆச்சரியப்படுவதற்கோ ஏதுமிருப்பதாக இல்லை. ஏனெனில், இராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரனும் சரி, கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் சரி இனத்தைக் காட்டிக்கொடுப்பதையே ...

# செயலக ஊழியர்களுக்கு இடையில் மண்ணெய் வழங்கலில் பாரபட்சம்

(நமது நிருபர்)

யாழ். செயலக ஊழியர்களிடையே மண்ணெண்ணெய் விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரியவந்துள்ளது. யாழ். அரச அதிபரின் பெயரிடப்பட்டு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட மண்ணெண்ணெயே இவ்வாறு செயலக ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக நம்பப்படுகிறது

இம் மண்ணெண்ணெய் விநியோகத்தின்போதுகடந்த செப்ரெம்பர் மாதம் பத்தாம் திகதி யாழ். செயலக உயர் அதிகாரிகள் பலருக்கு தலா நூறு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்ட இம் மண்ணெண்ணெய் அங்கு கடமையாற்றும் 16 உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டதாகவும் ஏனையவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறாத உயர் அதிகாரிகள் சிலர் தாம் 'இந்த செயலகத்தின் ஊழியர்கள் இல்லையா' எனக்கேட்டு தமக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படாதது குறித்து யாழ். அரச அதிபருக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ். செயலகநலன்புரிச்சங்க அங்கத்தவர்களுக்கு நேற்று முன்தினம் ஒருவருக்கு பத்துலீற்றர்வீதம் கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. கடமைநேரத்தில் இவ் ஊழியர்கள் வெற்றுக் கானுடன் மண்ணெண்ணெய்க்காக காத்துநின்றதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் தமக்கும் வழங்கப்படல் வேண்டும் என முன்னர் 100 லீற்றர் பெற்ற உயர் அதிகாரிகள் வாதிட்ட வண்ண மிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இது தொடர்பாக ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் உயர் அதிகாரிகளில் ஓரிருவர் மட்டுமே மோட்டார் வாகனத்தில் வேலைக்கு வருவதாகவும் ஏனையோர் துவிச்சக்கர வண்டியிலேயே வருவதாகவும் கூறியதுடன் இவர்கள் முன்னர் எடுத்த மண்ணெண்ணெய் மூன்று மாதங்களுக்குள் தீர்ந்துவிட்டதாம், இப்போது எமக்கு கிடைக்கும் பத்து லீற்றரிலும் பங்கு கேட்டு நிற்பதைப்பார்க்க வேதனையாகவுள்ளதாக கூறினார். இதேவேளை இவ் ஊழியர்களில் சிலர் எல்லோருக்கும் சம அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படல்வேண்டும் எனவும் இன்றேல் தாமும் மண்ணெண்ணெயை பெறப்போவதில்லை எனவும் கூறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக கடந்த பதினொரு மாதங்களில் ஒரு குடும்பத்திற்கு பன்னிரண்டரை லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இம் மண்ணெண்ணெய்யும் மேற்படி செயலக ஊழியர்கள் அனைவருக்கும் கிடைத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

மக்கள் நலனைப் பேண வேண்டிய இவ் அதிகாரிகள் தம் நலனைப் பேணுவதையே குறியாகக் கொண்டிருப்பதைக்கண்டு மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

## யூனியன் கல்லூரி வெற்றி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட 15-வயதுப் பிரிவின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து லெப். கேணல் இம்ரான் சுழற் கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டது.

3-வது இடத்துக்கான போட்டியில், சென். ஹென்றீஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை தோற்கடித்தது. பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக, ஓய்வுபெற்ற உடற்கல்வி விரிவுரையாளர் திரு. யதுகுலசிங்கம் கலந்துகொண்டார். தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், மாணவரமைப்பு பொறுப்பாளர் திரு.இன்பன், இறுதிப்போட்டிகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

மழையின் மத்தியில் நடந்த இப்போட்டிகளை பெருமளவு மக்கள் கண்டுகளித்தனர்.

(11,09)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 19 வயதுப் பிரிவின் இறுதிப்போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி மழைகாரணமாக நேற்று ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது முதலாம் இடத்திற்கான போட்டியில் புனித கென்றியரசர் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி மோதுகின்றது. முதல் இடத்தைப் பெறும் அணிக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை வழங்கும் மேஜர் முரளிநினைவுச் சுற்றுக்கிண்ணம் வழங்கப்படும்.

## சமுகம் தரவும்

(தென்மராட்சி)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமைபுரியும் சகல கிராம சேவை உத்தியோகத்தர்களையும் நாளைதிங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு தவறாது சமுகம் தருமாறு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்அறிவித்துள்ளார்.

(86)

யாழ். மாவட்ட இலங்கை வங்கிக்கிளைகளில்

# சுயதொழில் முயற்சிக் கடன் அதிகரித்த வட்டி அறவீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கிக் கிளைகளினால் யாழ். மாவட்டத்தில் சுயதொழில் முயற்சிக்கென வழங்கப்படும் கடனுக்கு 21 சதவீத வட்டி அறவிடப்படுவதாக இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஏனைய மாவட்டங்களில் சுயதொழில் முயற்சிக் கடனுக்கென 14சதவீத வட்டி மட்டுமே அறவீடு செய்யப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை வங்கியின் தலைமைப்பீடத்தின் பாரபட்சமான நடவடிக்கையினாலேயே இவ்வட்டி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக யாழ். இலங்கைவங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உலகவங்கியின் சுயதொழில் முயற்சித் திட்டத்தின்கீழ் ஏனைய மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைப்போன்று யாழ். மாவட்டத்திற்கு நிதிஒதுக்கீடு செய்யாமையே இந்நிலைமைக்குக் காரணம் என அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவிக்கின்றன.

இப்பொழுது யாழ். மாவட்டத்தில் வழங்கப்படும் சுயதொழில் முயற்சிக்கான கடன் வங்கியின் நிதியில் இருந்தே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட ரீதியாக இலங்கையில் இலாபத்தில் இயங்கும் ஒரு சில இலங்கை வங்கிக் கிளைகளில் யாழ். மாவட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

(நி)

# தமிழகத்தில் சூறாவளிக்கு இருபதிற்கு மேற்பட்டோர் பலி

## பெருமளவு சொத்துகள் நாசம்

(சென்னை)

நேற்றுத் தமிழ்நாட்டு கரையோரத்தைத் தாக்கிய சூறாவளியினால் இருபதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீட்டுச் சுவர்கள் இடிந்து விழ்ந்ததினாலும், மரங்கள் வீழ்ந்ததினாலும், வெள்ளத்தில் மூழ்கியும் இம் மரணங்கள் இடம் பெற்றதாகசெய்திகள் மேலும்தெரிவிக்கின்றன.

இதேவேளை, சூறாவளி தாக்கிய காரைக்கால் பகுதியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதினால் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது

## நாவலர் குருபூசை

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை இன்றுமாலை 6 மணிக்கு நடைபெறும். ''சைவம்வளர்த்த நாவலர்'' என்னும் பொருளில் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

## நுவரேலியா நகரத்தின் தமிழ் மேயருக்கு சீருடை வழங்க மறுப்பு

(கொழும்பு)

நுவரேலியா மேயராக பொறுப்பேற்றுக் கொண்ட தமிழருக்கு மாநகரசபை ஆணையாளரால் மேயருக்குரிய சீருடை, பதக்கம் ஆகியவை வழங்கப்படவில்லை, ... லியா மேயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் 26ஆம் திகதி இவருக்கு பாராட்டு விழா நடைபெற்ற போது மாநகரசபை ஆணையாளரால் மேற்படி சீருடை, பத...

## சூறாவளி

...துவமனைக்கு அண்மையில் வீதியோரமாக நின்ற பாரிய புளியமரம் ஒன்றும் சாய்ந்த நிலையில் இருந்ததை ... பராய், புத்தூர் ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பல வாழைத்தோட்டங்கள் சேதமடைந்துள்ளன. குலையுடன் வாழை மரங்கள் முறிந்து காணப்பட்டன. பல வாழை ... விழுந்து போக்குவரத்து தடைப்பட்ட போதிலும் பின்னர் தடைகள் நீக்கப்பட்டன.

இப்பகுதியில் தாழ்ந்த நிலங்களில் செய்கை பண்ணப் ...

மறைமுக வேடம்போட்டுள்ள வேடதாரிகளை அரசாங்கம் இனம்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்பதே அவரது கோரிக்கை ஆகும்.

அமைச்சர் இராஜமனோகரியின் இக்குற்றச்சாட்டில் எத்தகைய உண்மையுள்ளது, பொய்யுள்ளது என்பது இங்கு மூக்கியமில்லாத ஒன்று. ஏனெனில், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களின் நடவடிக்கைகளை முழுமையாக சிறிலங்கா அரசாங்கமும், ஆயுதப்படையும் அதன் புலனாய்வுத்துறையும் அவதானித்துவருவதோடு, கட்டுப்படுத்தியும் வழிநடத்தியும் வருகின்றன.

மேலும், அக்குழுக்களுக்கான ஆயுத விநியோகம் உட்பட உணவு, பணம் என்பவையும் அரசாங்கத்தினாலேயே வழங்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில், இராஜாங்க அமைச்சரின் குற்றச்சாட்டு என்பது எத்தனை பொருத்தப்பாடு என்பது கேள்வியே. இந்நிலையில் அவரது குற்றச்சாட்டு என்பது அரசிற்கான விசுவாசத்தைக் காட்டும் முயற்சியே தவிர வேறெதுவுமில்லை.

ஆனால், இதில் எவரும் பெரிதாகக் கவலைப்படுவதற்கோ அன்றி குறைபட்டுக்கொள்வதற்கோ அன்றி ஆச்சரியப்படுவதற்கோ ஏதுமிருப்பதாக இல்லை. ஏனெனில், இராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரனும் சரி, கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் சரி இனத்தைக் காட்டிக்கொடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். காட்டிக்கொடுத்தே பதவி பெற்றவர்கள். இவர்களில் ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுப்பதில் புதிதாக ஏதும் இல்லை.

ஆனால், திருமதி இராஜமனோகரி புலேந்திரன் இதனை முக்கிய விடயமாக வரவு - செலவுத்திட்டத்தின் உரையின் போது பிரஸ்தாபித்தமைதான் முக்கியமானதாகஉள்ளது. அதாவது தமது இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியதற்காக மீண்டும் தமது விசுவாசத்தை வலியுறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் வந்தது என்பதே கேள்வியாகும்.

இந்நிலையில்தான் டி. பி. விஜேதுங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா போன்றவர்களின் அரசியல் அணுகுமுறை போன்ற அணுகுமுறையைக்கொண்டிருக்கவில்லை என்பதை இராஜாங்க அமைச்சர் புரிந்துள்ளாரோ என்று எண்ண வைக்கின்றது. அதாவது, பௌத்த சிங்களப்பேரினவாதத்திற்கு வெளிப்படையாகவேதலைமை தாங்க டி.பி விஜேதுங்க முற்படுவதை விளங்கிக்கொண்டுள்ளாரா என்பதே ஆகும்.

இதனை விளங்கிக்கொள்ள அவருக்குப் போதிய வாய்ப்புக்களும் உண்டு. அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைக் கைவிட்டு தமிழ்க்குழுக்களை நட்டாற்றில் கைவிட்டமை, சுமார் 15 வருடங்களுக்கு மேலாக அரசிற்குவிசுவாசமாகவிருந்த அமைச்சர் தொண்டமானை புறந்தள்ள முற்பட்டமை என்பன இதனை அவருக்குப் புரியவைத்திருக்கலாம். குறிப்பாக, சுமார் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளை நிர்ணயிக்கக்கூடிய தொண்டமானுடன் டி.பி. விஜேதுங்க நடந்துகொள்ளும் முறையானது, இவருக்கு அரசில் தனது இருப்பைப் பற்றிச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

இந்நிலையில்தான் வழமையான பாணியில் காட்டிக்கொடுப்பின்மூலம் தனது நிலைப்பாட்டை இராஜமனோகரி புலேந்திரன் நிலைநிறுத்த முற்பட்டிருக்கின்றார் எனலாம் ஆனால் எவ்வளவுதான் இராஜாங்க அமைச்சர் சிங்கள அரசிற்கு விசுவாசமாக நம்பநடந்தாலும் சிங்களப் பேரினவாதம் தமிழர்களை நம்பிநடக்கப்போவதோ அன்றி நம்பப்போவதோ இல்லை. அதாவது தமிழர்கள் தாம் தமிழர் என்பதை மறந்தாலும் சிங்களவர்கள் இவர்கள் தமிழர்கள் என்பதை மறப்பதில்லை. இதுவே வரலாற்றுப் பாடம்.

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கிக் கிளைகளினால் யாழ். மாவட்டத்தில் சுயதொழில் முயற்சிக்கென வழங்கப்படும் கடனுக்கு 21 சதவீத வட்டி அறவிடப்படுவதாக இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஏனைய மாவட்டங்களில் சுயதொழில் முயற்சிக் கடனுக்கென 14சதவீத வட்டி மட்டுமே அறவீடு செய்யப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை வங்கியின் தலைமைப்பீடத்தின் பாரபட்சமான நடவடிக்கையினாலேயே இவ்வட்டி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக யாழ். இலங்கைவங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உலகவங்கியின் சுயதொழில் முயற்சித்திட்டத்தின்கீழ் ஏனைய மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைப்போன்று யாழ். மாவட்டத்திற்கு நிதிஒதுக்கீடு செய்யாமையே இந்நிலைமைக்குக் காரணம் என அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவிக்கின்றன.

இப்பொழுது யாழ். மாவட்டத்தில் வழங்கப்படும் சுயதொழில்முயற்சிக்கான கடன் வங்கியின் நிதியில் இருந்தே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட ரீதியாக இலங்கையில் இலாபத்தில் இயங்கும் ஒரு சில இலங்கை வங்கிக் கிளைகளில் யாழ். மாவட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

(நி)

(சென்னை)

நேற்றுத் தமிழ்நாட்டு கரையோரத்தைத் தாக்கிய சூறா

## நாவலர் குருபூசை

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை இன்றுமாலை 6 மணிக்கு நடைபெறும். ''சைவம்வளர்த்த நாவலர்'' என்னும் பொருளில் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

## பெருமளவு சொத்துகள் நாசம்

வளியினால் இருபதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீட்டுச் சுவர்கள் இடிந்து விழ்ந்ததினாலும், மரங்கள் வீழ்ந்ததினாலும், வெள்ளத்தில் மூழ்கியும் இம் மரணங்கள் இடம் பெற்றதாகசெய்திகள் மேலும்தெரிவிக்கின்றன.

இதேவேளை, சூறாவளி தாக்கிய காரைக்கால் பகுதியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதினால் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது

## நுவரேலியா நகரத்தின்
# தமிழ் மேயருக்கு சீருடை வழங்க மறுப்பு

(கொழும்பு)

நுவரேலியா மேயராக பொறுப்பேற்றுக் கொண்ட தமிழருக்கு மாநகரசபை ஆணையாளரால் மேயருக்குரிய சீருடை, பதக்கம் ஆகியவை வழங்கப்படவில்லை,

கடந்த 22ஆம் திகதி விவேகானந்தன் என்பவர் நுவரேலியா மேயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் 26ஆம் திகதி இவருக்கு பாராட்டு விழா நடைபெற்ற போது மாநகரசபை ஆணையாளரால் மேற்படி சீருடை, பதக்கம் போன்றவற்றுடன் பொறுப்புகள் கூட ஒப்படைக்கப்படவில்லை.

பாராட்டு விழா அன்று முன்னாள் மேயர் அன்பளிப்பாகக் கொடுத்ததையே அணிய வேண்டிவந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

## சூறாவளி

துவமனைக்கு அண்மையில் வீதியோரமாக நின்ற பாரிய புளியமரம் ஒன்றும் சாய்ந்த நிலையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

மேலும்ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி ஆகிய பகுதிகளில் காணப்படும் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பலவற்றில் வெள்ளம் தேங்கிநிற்கிறது. இதனால் சுமார் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதேபோல இணுவில், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்தும் மக்கள் வெளியேறியுள்ளனர். மேலும் கொழும்புத்துறை, மணிப்புரி, வசந்தபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன. பாசையூர் அந்தோனியார் ஆலயத்தில் மட்டும் சுமார் 294 இற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியுள்ளன.

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகள் எங்கும் பல பயன்தரும் மரங்கள் முறிந்து காணப்படுகின்றன. தென்னை, பனை போன்ற மரங்கள் வீதிகளின் குறுக்காக விழுந்தும் மின்கம்பங்கள் ஆங்காங்கு சாய்ந்தும் வீழ்ந்தும் அந்தரத்தில் தொங்கிய வண்ணமும் காணப்பட்டன. கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் துரை என்பவரதுவீட்டின்மீது தென்னை மரம் ஒன்று வீழ்ந்து காணப்பட்டது.

யாழ். நகரப் பகுதிகளிலும் பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்தும் கட்டடங்களின் கூரைகள் சேதமடைந்தும் காணப்படுகிறது. யாழ். செயலக கட்டடத் தொகுதியின் மீதும் மரம் ஒன்று வீழ்ந்து காணப்பட்டது. நகரின் வீதிகளில் வீழ்ந்திருந்த மரங்களை அகற்றுவதில் மாநகரசபை ஊழியர்கள் நேற்றுக்காலை ஈடுபட்டிருந்தனர்.

கோப்பாய், நீர்வேலி, ஏழாலை, சுன்னாகம். உரும்பராய், புத்தூர் ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பல வாழைத்தோட்டங்கள் சேதமடைந்துள்ளன. குலையுடன் வாழை மரங்கள் முறிந்து காணப்பட்டன. பல வாழை மரங்கள் வேருடன் பெயர்த்தெறியப்பட்ட நிலையில் காணப்பட்டன.

வடமராட்சிப் பகுதி மீது சற்று அதிகமாக சூறாவளியின் தாக்கம் காணப்பட்டது.

கரவெட்டியைச் சேர்ந்த க. யசோதா (வயது 30) தீக்காயத்துடனும், நவிண்டிலைச் சேர்ந்த ஜெ. பரமேஸ்வரி (வயது 32) வீட்டில் படுத்திருந்த போது மரம் விழுந்து காயமடைந்த நிலையிலும், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வடமராட்சியில் கரையோரப் பகுதிகளே கூடுதல் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. வடமராட்சி வடக்கு தொண்டமனாறு முதல் வடமராட்சி கிழக்கு தாளையடி வரையில் பாதிப்புக்கள் அதிகரித்திருக்கின்றன.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் முந்நூறுக்கு மேற்பட்ட வாடிகள் அழிந்துள்ளன. ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுமரங்கள் சேதமடைந்தன. மேலும் பல கட்டுமரங்கள் கடலுடன் அள்ளப்பட்டுசென்றுள்ளன அக்கட்டுமரங்களை மீட்கும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பல ஆயிரக் கணக்கான மீன்பிடி வலைகள் அலையுடன் அள்ளிச் சென்றுள்ளன. என்ஜின்படகுகள் சிலவும் சேதமடைந்தன.

மற்றும் தாழ்ந்த பகுதிக் குடியிருப்புகளிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. மரங்கள் விழுந்து 10க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. உட்பகுதி குடியிருப்புக்களிலும் பலத்த சேதமேற்பட்டன. மரங்கள் வீழ்ந்து நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி, வியாபாரிமூலை, வல்வெட்டித்துறை மற்றும் பகுதிகளிலும் வீடுகள் சேதமடைந்தன வீதிகளின் மேல் மரங்கள் விழுந்து போக்குவரத்து தடைப்பட்ட போதிலும் பின்னர் தடைகள் நீக்கப்பட்டன.

இப்பகுதியில் தாழ்ந்த நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட நெல்வேளாண்மை, மிளகாய், வெங்காயம்மற்றும் சிறுதானிய வகைகள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து காணப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது துறைமுகப்பகுதியின் சுற்றுப் புறங்கள் உடைப்பெடுத்த நிலையில் சேதமடைந்து காணப்பட்டன. அருகில் இருந்த கட்டடங்களும் இடிந்து விழுந்துள்ளன இப்பகுதியில் சில கட்டுமரங்கள் சேதமடைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

இத் துறைமுகப்பகுதியில் கட்டி விடப்பட்டிருந்த இழுவைப்படகுகளில் இரண்டு நீரில் மூழ்கியுள்ளது துவாரம் கொண்ட இப்படகுகளுக்குள் கடல் நீர் சென்று நிரப்பிக் கொண்டதாலேயே இப்படகுகள் நீரில் மூழகியதாக எமது வடமராட்சி செய்தியாளர் அறிவித்துள்ளார்,

(க, யோ, 21, 24, 86, 07, 41)

## சிசிலின்

டியான நிகழ்வுகளிலேயே பூநகரி முகாம் புலிகள் தாக்கி அழித்த சம்பவம் மிகவும் மோசமானது. தெற்கில் சிங்களவர்கள் கோபமும் அதிர்ச்சியும் அடைந்தனர். இந்த தளபதி போகவேண்டியவர் தான் என்பது அப்போதே தெரிந்துவிட்டது. இவர் விலகி விடுவதால்பெரிதாக மாற்றம் ஒன்றும் ஏற்படப்போவதில்லை.

## பரீட்சை முடிவுகள்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில்1992ம்ஆம் ஆண்டுநடைபெற்றபரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.

## படகு

கிருபராசா (21) ஆகிய மூவருமே இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர்தப்பி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒருவர் இதுகுறித்து தெரிவிக்கையில்; வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் காக்கைதீவு துறையில் இருந்து நாங்கள் மூவரும் தொழிலுக்கு போனோம். தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது 10 மணியளவில் பெரும் காற்று எங்கள் படகை திசை மாற்றி இழுத்துச்சென்றது. நாங்கள் எவ்வளவு முயன்றும் படகை திருப்பமுடியவில்லை. உடனே நாங்கள் ஏற்கனவே பிடித்துப் படகில் போட்டிருந்த மீன்களை தூக்கி கடலில் வீசினோம். அப்போது வேகமாக தாக்கிய காற்றில் படகு கவிழ்ந்தது. நாங்களும் கடலினுள் வீசப்பட்டோம். பின் கரையை நோக்கி பலங்கொண்டமட்டும் நீந்தியும் கொஞ்சத்தூரம்கூட எங்களால் முன்னேற முடியாதவாறு கடல் அடித்துக்கொண்டிருந்தது. நாங்கள் நீந்துவதை விட்டுவிட்டு படகின் பக்கம் சென்று படகின் மீது ஏறி இருந்தோம். விடிந்ததும்தான் நாங்கள் பண்ணை கடலில் வில்லூன்றிப் பக்கமாக இருப்பதை உணர்ந்தோம். ஒருவாறு நாங்கள் தப்பி வந்துவிட்டோம். எங்களுடைய படகு நடுக்கடலில் இருக்கிறது என்றார்.

(சி), (24)

## எறிகணைவீச்சு 2குழந்தைகள் காயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் குழந்தைகள் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த இரு குழந்தைகளும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அமைச்சரவை

விக்கப்படுகிறது.

இதேவேளை தொண்டமான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்துகொண்டால் சிங்கள மக்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை எதிர்க்கவேண்டும் என சிங்கள பாதுகாப்பு சங்கத் தலைவர் காமினி ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

## இனங்

கமும் எழுதப்பட்டிருந்தது

மேற்படி வயோதிபரின் சடலத்தை அடையாளம் காணக் கூடியவர்கள் தமிழீழக்காவல் துறையின் கோப்பாய் நிலையத்துடன் தொடர்புகொள்ளும்படிகேட்கப்பட்டுள்ளனர்.

**அன்னியஉணவை மறப்போம்-நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்**

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 03- 12- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11597

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5046, 42-3927, 41-9696, 24-1983, 28-6640, 24-4390, 26-1019, 28-6020, 27-9833, 28-3429, 24-5886, 28-1110, 28-3004, 42-0526, 24-6489, 28-6748, 24-8558, 24-7267, 26-1690.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5113, 26-8052, 41-5015, 24-6448, 24-5955.

### 04-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11597

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9480, 28-9622, 24-9337, 42-1178, 26-7039, 27-2056, 24-2680, 24 9773, 42-3726, 41-1996, 42-0969, 28 8367, 28-2464, 26-7353, 28-4550, 43 3854, 42-9345, 27-5077, 28-2956, 27-4070.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

24 5069, 26-2070, 26-2125, 26-2979, 26-3370, 24-5[illegible]41, 27-5[illegible]45, 24 8631 26-6842.

---

உ

சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

### தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின்தந்தையும் ஐந்தாம் சமய குரவருமான நல்லை ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் அவர்களின் குருபூசைத் தினவிழா 0[illegible]-12-1993

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு விசேட பூசையும், மாலை 2.30 மணி தொடக்கம்கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

- மங்கள இசை — தவில்மேதை அமரர் என். ஆர் சின்னராசாவின் புதல்வர்கள்
- நூல் வெளியீடு— 'இந்து நெறிச் சஞ்சிகை'
- சொற்பொழிவு— பண்டிதர்க.சச்சிதானந்தம்எம்.ஏ விடயம் — 'சமூக உளவியலும் நாவலரின் பிரசார முறையும்'
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் அளிக்கும்

**வாத்தியவிருந்து-கானவிருந்து-நடனவிருந்து**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் திருநெல்வேலி.

**இந்து மன்றம்** யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர பங்களிப்பு:

## மேலும் சில பரீட்சை நிலையங்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஆரம்பிக்கவிருக்கும் நடைபெற இருக்கும் க.பொ.த (சாதார) பரீட்சைக்கான மேலும் சில பரீட்சை நிலையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம்-5, யாழ். மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலயத்திற்கும், யாழ். சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய மண்டபம்-2, யாழ். ஆனைக்கோட்டை றோ. க. வித்தியாலயத்திற்கும், யாழ். வட்டு. திருஞான சம்பந்தர் வித்தியாலய மண்டபம் - 2 யாழ். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## உதைபந்தாட்டம்

விளையாட்டு அபிவிருத்திக் குழு மாவட்டரீதியில்நடாத்த இருக்கின்ற உதை பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தெரிவுப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமையன்று சென் அன்ரனீஸ் அணியைஎதிர்த்து உதயசூரியன் அணியும் செவ்வாய்கிழமையன்று றோயல் அணியைஎதிர்த்து சித்திவிநாயகர் அணியும், புதன்கிழமையன்று பாடும் மீன் அணியை எதிர்த்துபொற்பதி அணியும் விளையாடவுள்ளன. தினமும் பிற்பகல்மூன்று மணிககு போட்டிகள் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அக்டோபர் மாத ஒளிவீச்சு வெளியீடு

நிதர்சனம் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் 'ஒளிவீச்சு' வீடியோ சஞ்சிகையின் அக்டோபர்மாதவெளியீடுநாளை திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இது அன்றையதின நிகழ்ச்சியில் அகன்ற திரையில் காண்பிக்கப்பட இருப்பதுடன் வழமையான சிறப்பம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

## "உண்மைகள்" அறிமுகவிழா

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் கழகத்தின் ஏற்பாட்டில் வளவை வளவனின் "உண்மைகள்" அறிமுக விழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்

## பொதுக்கூட்டம்

1992 ஏப்ரல் விசேட பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு பரிகாரம் தேடும் முகமாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்களிற்கான பொதுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## தபால் அறிமுக அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகம் ஊடாக தபால் அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை அவற்றை பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் யாழ் பிரதம தபாலகத்தில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய் [illegible]

## போர்த்தளபாட

பெருமளவில் கொல்லப்பட்டனர். மேலும் இந்த ரக விமானங்களுக்கு உதிரிப் பாகங்கள் வாங்க முடியாமல் இருக்கின்றன.

இதற்கு பதிலளித்து பேசுகையில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா கூறியதாவது;

புக்காராவும் நல்லமுறையில் பூநகரியில் செயல்படுத்தப்பட்டன என்று குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்கள்

லயன் L. றேமன் முத்தையா

# விடுதலைப்போராட்ட மத்தியில் தேச நிர்மாணிப்புக்கு அடித்தளம்

### குறும்பட வெளியீட்டு விழாவில் புதுவை இரத்தினதுரை

மண்ணின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில விடுதலை பெறுகின்ற தேசத்தின் நிர்மாணிப்புக்கான அடித்தள வேலைகளிலும் ஈடுபடுவதில் விடுதலைப்புலிகள் இயக்கம் உலக அரங்கிலேயேமுன்னணியில் திகழ்கின்றது. இவ்வாறு நேற்று மாலை விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகமும், நிதர்சனம் நிறுவனமும் இணைந்து தயாரித்த ''சின்னவிழிகள்'' குறும்பட வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டார்.

கலை பண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை நிதர்சன நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன்ஈகைச் சுடரை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். மௌன அஞ்சலி நிகழ்ச்சிக்குப் பின்னர் தீவக கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் குமணனின் வரவேற்புரையை தொடர்ந்து சேரலாதனின் தலைமையுரையும்இடம் பெற்றது வெளியீட்டுரையைத் தொடர்ந்து தமிழீழ அரசியற் துறையின் துணைப்பொறுப்பாளர் கரிகாலன் வீடியோப் பிரதியை வெளியிட்டுவைக்க யாழ் மாவட்டத் தளபதி மகான் அதனைப் பெற்றுக் கொண்டார். இக் குறும்படத் தயாரிப்பில் பங்கேற்ற கலைஞர்களுக்கு அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

இவ் விழாவில் உரையாற்றிய புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில்; மண்ணின் விடுதலைக்காக போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில் தேச நிர்மாணிப்புக்கான பணிகளிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது பொருண்மிய மேம்பாட்டிலும் சரி, கல்வித் துறையிலும்சரி, அரசஅமைப்புக்களுடன் முரண்படாமல் நிர்வாகத்தை நடத்திச் செல்வதிலும் சரி விடுதலைப் புலிகள் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். இவ்வகையிலேயே வீடியோ படத் தயாரிப்பு துறையிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இத்துறையில் பெற்ற வளர்ச்சியினாலேயே ''ஒளிவீச்சு'' வீடியோ சஞ்சிகை மாதாந்தம் வெளிவருகின்றதுஎன்றும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தமது சிறப்புரையின் போது உலக அரங்கில் இதுவரை கண்டிராதகேட்டிராத அரும்பெரும் அர்ப்பணிப்புகளுடன் மிகப்பெரும் சாதனைகளை ஈட்டி தமிழீழப் போராட்டம் முன்னேறி வருகின்றது. இன்றைய நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியிலும் மிகக் குறுகிய இருபது நாட்களுக்குள் இப்படம் தயாரிக்கப்பட்டு இருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

திரு. யேசுராசா, திருமதி கோகிலா மகேந்திரன், திரு. செம்பியன் செல்வன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை ஆற்றினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன நிர்வாக சபையின் உறுப்பினரும் சிறந்த சமூக சேவையாளருமான

### உயர்திரு. L. றேமன் முத்தையா

(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)

உயர்திரு. L. றேமன் முத்தையா அவர்களின் திடீர் மறைவால் ஆழ்ந்த துயரும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பதிவாளர்
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
அலுவலர்கள். ஆசிரியர்கள்,
மற்றும் மாணவர்கள்.

பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
PATRICIAN INSTITUTES
(சி-8060)

---

## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு. எல். ஆர். முத்தையா

வை. எம் சி. ஏ. ஸ்தாபனத்தின் இயக்குனர் சபை மூத்த உறுப்பினரும், Y's Men's கழகத்தின் முன்னாள் தலைவரும் ஆகிய அமரர் உயர்திரு எல்.ஆர்.முத்தையா அவர்களின் பிரிவுச் செய்தியை அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது நிறுவனங்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்

ஐந்தாம் சமய குரவருமான
நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின்

## குருபூசைத் தினவிழா 0‑-12-1993

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு விசேட பூசையும, மாலை 2. 30 மணி தொடக்கம்கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

- மங்கள இசை — தவில்மேதை அமரர் என். ஆர் சின்னராசாவின் புதல்வர்கள்
- நூல் வெளியீடு— 'இந்து நெறிச் சஞ்சிகை'
- சொற்பொழிவு— பண்டிதர்க. சச்சிதானந்தம்எம்.ஏ விடயம் — 'சமூக உளவியலும் நாவலரின் பிரசார முறையும்'
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் அளிக்கும்

**வாத்தியவிருந்து-கானவிருந்து-நடனவிருந்து**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

**இந்து மன்றம்**
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர பங்களிப்பு:

**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ் அன் பான்சி குட்ஸ்**
பலாலிவீதி, திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி (சி-8048)

## தேவை

## மொழிபெயர்ப்பாளர்கள்

### ஆங்கிலம் -- தமிழ்

தொழில்நுட்பம், இலக்கியம், அரசியல், திரைப்படமொழிமாற்றம் ஆகிய துறைகளில் அனுபவமுள்ளோர் விண்ணப்பிக்கவும், வீட்டிலிருந்து கொண்டே பணியாற்ற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

### அழகியற்பாணி எழுத்தர்கள்

புத்தக முகப்பு அட்டை உருவாக்கத்தில் முன் அனுபவம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு
விளம்பர இல. 208
மே-பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(6776)

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்**

## பிற்போடப்பட்டுள்ளது

நேற்று (4-12-93) நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 22-12-93-ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

கூட்ட நிகழ்ச்சி நிரல் பேராளர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1993-12-04 - தலைவர்.
(சி-8061)

வீடியோ சஞ்சிகையின் அக்டோபர்மாதம்வெளியீடுநாளை திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இது அன்றையதின நிகழ்ச்சியில் அகன்ற திரையில் காண்பிக்கப்பட இருப்பதுடன் வழமையான சிறப்பம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

## "உண்மைகள்" அறிமுகவிழா

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் கழகத்தின் ஏற்பாட்டில் வளவை வளவனின் "உண்மைகள்" அறிமுக விழா இன்று பிற்பகல் 2. 30 மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளர் சி. இளம்பரிதியும், விசேட விருந்தினர்களாக கைதடி வட்டவைப் பிரிவுப் பொறுப்பாளர் குமரனும் தென்மராட்சி மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் செல்வி கலை, தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் விபுலன்மற்றும் கிராம சேவையாளர் ஜோசப் இரட்ணராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

**UNIVERSITY OF JAFFNA-SRI LANKA**

**Admission Test for the Postgraduate/ Diploma in English Language Teaching**

**1992 93**

The Admission Test for the above course will be held on 1993 - 12 - 09 at 10.00 a.m. in the Ramanathan Hall, University of Jaffna Please Collect your Admission Card son 7th & 8th of December 1993, personally at the Examination Branch.

1993-12-04 Registrar
(சி-8064)

**போர்த்தளபாட**

பெருமளவில் கொல்லப்பட்டனர். மேலும் இந்த ரக விமானங்களுக்கு உதிரிப் பாகங்கள் வாங்க முடியாமல் இருக்கின்றன.

இதற்கு பதிலளித்து பேசுகையில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா கூறியதாவது;

புக்காராவும் நல்லமுறையில் பூநகரியில் செயல்படுத்தப்பட்டன என்று குறிப்பிட்டார்.

தயாரிப்பில் பங்கேற்ற கலைஞர்களுக்கு அரசியற்றுறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ் விழாவில் உரையாற்றிய புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில்; மண்ணின் விடுதலைக்காக போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில் தேச நிர்மாணிப்புக்கான பணிகளிலும் விடுத

# மரண அறிவித்தல்கள்

## லயன் L. றேமன் முத்தையா

கரம்பனூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தில் 67/1, கோவில் வீதியில் வசித்தவரும், இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளரும், பல பொது நல சேவை அமைப்புக்களுடன் இணைந்து இறுதிவரை பணியாற்றி வந்தவருமாகிய லயன் L. றேமன் முத்தையா அவர்கள் 3-12-93ல் காலமானார். அன்னார் நவமணியின் அன்புக் கணவரும், குமார், காந்தி, டாக்டர் கமால், குமுதினி, டாக்டர் கிருஷ்ணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வத்சலாகுமார், மகேந்திரன் மனுவேற்பிள்ளை, டாக்டர் தர்ஷினி கமால், மாக்கஸ் மரியநாயகம், டாக்டர் சிறிபதி அழககோன் ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், ஷிவோன், ஷெறீன், அனுஷா, கிறிஸ்ரீன், கிருஷாந்தன், ஆத்திக்கா ஆகியோரின் நேசம் நிறைந்த பேரனும், L. E. முத்தையா (விஜயா) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 5-12-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் ஆரம்பமாகி புனித யுவானியார் ஆலயத்தில் 10-00 மணிக்கு திருப்பலியின்பின் நல்லடக்கத்துக்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

67/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**நவமணி முத்தையா**
(மனைவி)

(6772)

திருமதி
## யோகரஞ்சினி புவிராஜசிங்கம்

(முல்லைத்தீவு பிரபாகர் பார்மசி உரிமையாளர்)

திருமதி யோகரஞ்சினி புவிராஜசிங்கம் காலமானார். இவர் சென்யோண் புவிராஜசிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்) அவர்களின்அன்புமனைவியும், சுதாகர், பிரபாகர் (சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்) நிருபாகர் (புனித கென்றியரசர் கல்லூரி இளவாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 5 12 93 இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 55, சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் முகவரியில் உள்ள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

55, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்

தகவல்
சென்யோண்
புவிராஜசிங்கம்
(கணவர்)

(6777)

பதிவாளர்
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
அலுவலர்கள். ஆசிரியர்கள்,
மற்றும் மாணவர்கள்.

**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்**
**PATRICIAN INSTITUTES**
(சி-8060)

## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு. எல். ஆர். முத்தையா

வை. எம் சி. ஏ. ஸ்தாபனத்தின் இயக்குனர் சபை மூத்த உறுப்பினரும், Y's Men's கழகத்தின் முன்னாள் தலைவரும் ஆகிய அமரர் உயர்திரு எல்.ஆர்.முத்தையா அவர்களின் பிரிவுச் செய்தியை அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது நிறுவனங்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜா
தலைவர்
வை.எம்.சி.ஏ. யாழ்ப்பாணம்.
Y's Men's கழகம், யாழ்ப்பாணம்.

(6780)

## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு. L. றேமன் முத்தையா

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 உப தலைவராகவும் மற்றும் பொது அமைப்புக்களின் அங்கத்தவராகவும் இருந்து அனைத்து மக்களுக்கும் அரும்பணியாற்றிய லயன் L. றேமன் முத்தையா அவர்களின் மறைவையொட்டி நாங்கள் அனைவரும் ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பூம்புகார் வீதி,
அரியாலை "தீவகம்"

மணியரசன் வீடமைப்புத்திட்டம்
மக்கள்

(6779)

## இதய அஞ்சலி

### அமரர் L. றேமன் முத்தையா

எங்கள் சங்க தலைவரும் வேறு பல தொண்டர் ஸ்தாபனங்களில் சேவை புரிந்தவரும் பொது மக்களின் நன்மதிப்பை பெற்றவருமான திரு L.றேமன் முத்தையா அவர்களின் திடீர் மறைவு இத் ஸ்தாபனங்களின் சேவைக்கு பேரிழப்பாகும். அன்னாருடைய ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதுடன் அவருடைய குடும்பத்தினர்க்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட அரச தனியார் வர்த்தக வங்கிகளின்
வாடிக்கையாளர் நலன்காக்கும் சங்கம்

(6773)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது